Registered as a Newspaper        [illegible] 04        விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM        மக்கள் நாளேடு        Peoples Daily

நாதம் 04 : திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 23 (05-02-94) சனிக்கிழமை ஓசை 352

## போலி வியாபாரக் குறிகளுடன் பொருள்கள்விற்பனைக்குஎச்சரிக்கை

தமிழீழத்தில் சந்தைப்படுத்தப்படும் குளுக்கோஸ், அப்பசோடா, நீலம் போன்ற சில பொருள்கள் பிரபல்யமான வியாபாரக் குறிகளைக் கொண்ட போலியான பக்கற்றுக்களில் அடைத்தும் அல்லது போலிச் சுட்டுத் துண்டுகளைப் பாவித்தும் மக்களுக்கு விற்பனை செய்யப்படுவது தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தால் அவதானிக்கப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறான செயலென்பதை அறியத்தரும் அதே வேளையில் மக்களை ஏமாற்ற மேற்கொள்ளப்படும் இத்தகைய செயல்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனம் வலியுறுத்துகின்றது. இவ் வேண்டுகோளை மீறுபவர்கள் மீது (4ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கில்உள்ளது'பயங்கரவாதமே' இவர்கள் கோரிக்கை அழிக்கப்பட வேண்டும்

## 'சுதந்திரதின' உரையில் டி. பி. விஜேதுங்கா

[கொழும்பு]

வடக்கு-கிழக்கில் இன்று உள்ளது 'பயங்கரவாத'ப் பிரச்சினையே அதனால் அப் பிரச்சினை மிகவும் கொடூரமானதாகக் காணப்படுகிறது. இப் பயங்கரவாதிகளின் கோரிக்கையை அழிப்பதன்மூலம் இனவாதக் கொள்கையையும் குறுகிய அரசியல் ஆதிக்கத்தையும் முறியடிக்கமுடியும். இவர்களின் அச்சுறுத்தலுக்கு என்றும் நாம் அடிபணியமாட்டோம். இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா நேற்று சிறிலங்காவின் சுதந்திரதின செய்தியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; சிறிலங்காவில் ஒற்றையாட்சியை உறுதிப்படுத்த எம்மிடமுள்ள சகல வளங்களையும் ஒன்றிணைத்து செயற்படுத்தப்போகிறேன் என்பதை வெளிப்படையாகவே தெரிவித்துக் கொள்கிறேன்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தை நிறுத்த வேண்டிய நிலை முன்னெப்பொழுதையும் விட அவசியமாகியுள்ளது. என்றார்.

இதே வேளை வடக்கு, கிழக்கு யுத்தம் நிறுத்தப்பட வேண்டிய காரணம் அதிக செலவினம் என்ற வகையில் வருத்தம் தெரிவித்த சிறிலங்கா ஜனாதிபதி, இப்பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்பட வேண்டும். இதற்கான அரசியல் தீர்வு என்ன என்ற தெளிவான திட்டமொன்றை அவர் முன்வைக்கத் தவறிவிட்டார் என பி. பி. ஸி. சந்தேசிய செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்குப் பிரச்சினையைத் தொடர்ந்து பயங்கரவாதப் பிரச்சினை என கூறுவது ஜனாதிபதி இன்னும் பிரச்சினையை புரிந்துகொள்ளவில்லை என்பதையே காட்டுவதாகவும். தீர்வை முன்வைக்க தயங்கும் ஜனாதிபதி எவ்வாறு வடக்கு கிழக்கு பிரச்சினையை தீர்க்கப்போகிறார் என்பது ஆச்சரியத்திற்குரிய விடயம் எனவும் மேலும் தெரிவித்தார்.

## இனப் பிரச்சினைக்கு தீர்வு காண சர்வமத குழு அமைக்க முயற்சி

இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண்பதற்காக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையில் மத்தியஸ்தம்செய்வதற்கு சர்வமதக் குழு ஒன்றை அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இம் முயற்சியில் மெதடிஸ்த திருச்சபைஈடுபட்டுவருகிறது. இந்த முயற்சியின் முதற்கட்டமாக மெதடிஸ்த திருச்சபை அனைத்து மதத் தலைவர்களுடனும் பேச்சு வார்த்தை நடாத்தி வருகிறது. ஏற்கனவே மெதடிஸ்த திருச்சபையின் தலைவர்கள் மகா சங்கத்தின் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளனர்.

மகாசங்கத்தினருடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் விபரங்கள் குறித்து இன்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் இவர்கள் பேச்சுவார்த்தைநடாத்தவுள்ளனர் என தெரிகிறது.

மேலும் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் நடைபெறும் பட்சத்தில் இரு தரப்புக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்வதற்குரிய சர்வமதக் குழு ஒன்றை அமைத்துக் கொளவதும் மெதடிஸ்த திருச்சபைக் குழுவின் யாழ்ப்பாண விஜயத்துக்கான காரணங்களில் ஒன்று என்றும் கூறப்படுகிறது. (க), (நி)

## இரும்புப்பிடி கொள்கையே டி. பியின் யுக்தியாகும்

### பி. பி. சி. விமர்சனம்

(லண்டன்)

நாடு செழிக்க வேண்டுமாயின் வடகிழக்கில் 'பயங்கரவாதிகள்' அழிக்கப்பட வேண்டும் என்ற கருத்தே நேற்று சிறிலங்கா ஜனாதிபதியின் சுதந்திர தின உரையில் காணப்பட்டதாக பி.பி.ஸி செய்தியாளர் சியாகநுவோசு தெரிவித்தார். பாதுகாப்புப் படையினரை தொடர்ந்து எட்ட நிறுத்தி வைத்துள்ள பிரிவினைவாத குழுவிற்கு எதிராக இரும்புப் பிடிக் கொள்கையை கடைப் பிடிக்க கொண்டுள்ள யுக்தி (4 ஆம் பக்கம் பார்க்க)

## அரசினால் உரிமை மறுக்கப்படும் மக்கள் கிளர்ந்து போராடுவர்

### மெதடிஸ்த திருச்சபை செயலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்களுக்கான உரிமை அரசினால் மறுக்கப்படும் போது அம்மக்கள் எழுச்சி கொண்டு போராடுவதை நாம் யாழ்ப்பாணத்தில் காண்கின்றோம் என மெதடிஸ்த திருச்சபை ...

தேவாலயத்தில் நடத்திய கூட்டத்தில் துலிப் பெர்னாண்டோ பேசினார். தமிழரின் துன்ப துயரங்களை நாம் நேரில் அறிந்துள்ளோம். யாழ் மக்கள் நண்பர்களாக எம்முடன் பழகுகின்றனர். தமிழ ...

துயருறும் போது மெதடிஸ்த திருச்சபை கண்மூடி இருக்க முடியாது. நல்லெண்ண விஜயம் குறித்து நாம் அரசுடன் தொடர்பு கொண்ட போது பலன் கிடைக்கவில்லை. எனவே சர்வமத பிரதிநிதி ...

## டி. பியின் 'சுதந்திர தின' உரை சமாதானத்திற்கு முரணானது

## மெதடிஸ்த திருச்சபை செயலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்களுக்கான உரிமை அரசினால் மறுக்கப்படும் போது அம்மக்கள் எழுச்சி கொண்டு போராடுவதை நாம் யாழ்ப்பாணத்தில் காண்கின்றோம் என மெதடிஸ்த திருச் சபை செயலர் துலிப் பெர்னாண்டோ கூறினார். யாழ். வந்துள்ளமெதடிஸ்ததிருச்சபைக் குழுவினர் நேற்று யாழ். நகரில் இராணுவ நடவடிக்கையால் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டனர்.

மெதடிஸ்த திருச்சபைகுழுவினர் நேற்றுமாலை பருத்தித்துறை பேதுரு மெதடிஸ்த தேவாலயத்தில் நடத்திய கூட்டத்தில் துலிப் பெர்னாண்டோ பேசினார். தமிழரின் துன்ப துயரங்களை நாம் நேரில் அறிந்துள்ளோம். யாழ் மக்கள் நண்பர்களாக எம்முடன் பழகுகின்றனர். தமிழரின் பிரச்சினையைத் தீர்க்க இராணுவத் தீர்வு ஏற்ற வழியாகாது என்பது எமது திடவட்டமான முடிவாகும். அரசியல் தீர்வு ஒன்றே ஏற்ற வழியாகும். சுதந்திரத்தை இழந்து மற்றையவர்களுக்குக் கீழ் அடிமையாக வாழ்வதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழர்கள் இவ்வாறு துயருறும் போது மெதடிஸ்த திருச்சபை கண்மூடி இருக்க முடியாது. நல்லெண்ண விஜயம் குறித்து நாம் அரசுடன் தொடர்பு கொண்ட போது பலன் கிடைக்கவில்லை. எனவே சர்வமத பிரதிநிதிகள் அடங்கிய குழுவாக இந் நல்லெண்ண முயற்சிகளை மேற்கொள்கிறோம். சிறிலங்கா பௌத்த மகா சங்கத்துடனும் தொடர்பு கொண்டுள்ளோம். இவ்வாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்க முயற்சிக்கிறோம் எனவும் துலிப் பெர்னாண்டோ கூறினார்.

வேண்டும் என்ற கருத்தே நேற்று சிறிலங்கா ஜனாதிபதியின் சுதந்திர தின உரையில் காணப்பட்டதாக பி.பி.ஸி செய்தியாளர் சியாக நுவோசு தெரிவித்தார். பாதுகாப்புப் படையினரை தொடர்ந்து எட்ட நிறுத்தி

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# டி. பியின் 'சுதந்திர தின' உரை சமாதானத்திற்கு முரணானது

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் சுதந்திர தின உரை அரசு இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்விலேயே நாட்டம் கொண்டுள்ளது என்பதைக் காட்டுவதாக ஏ.எப்.பி செய்தியாளர் தெரிவித்தார்.

சுதந்திரதினத்தையொட்டி ஜனாதிபதி விஜேதுங்கா ஆற்றிய உரை விடுதலைப்புலிகளுடன் இனப்பிரச்சினை தொடர்பாக பேச்சு நடத்த அரசு எண்ணம் கொண்டுள்ளது என்ற முன்னையஅறிவிப்புக்கு முற்றிலும் முரணாகக் காணப்பட்டதாகவும் அச் செய்தியாளர் குறிப்பிட்டார். பிரிவினைவாதம் தொடர்பாக ஜனாதிபதி கடுமையான தொனியிலேயே உரையாற்றியதாகவும் இராணுவ நடவடிக்கைக்கே அரசு தயாராவதை காட்டுவதாகவும் ஏ. எப். பி செய்தியாளர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ் மக்களுக்காக குரல்கொடுக்க புலிகளை தவிர வேறெவரும் இல்லை

## அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பேர்னாண்டோ தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தற்போதைய நிலையில் தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க விடுதலைப் புலிகளைத்தவிர வேறு யாருமே இல்லை. இந்த நிலையில் தமிழ்மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே ஆகும்.

இவ்வாறு கிளிநொச்சியில் வைத்து அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். நேற்று வெள்ளிக்கிழமை அவரைச் சந்தித்த செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் குறிப்பிடும்போது, பெரும்பான்மை சிங்கள மக்கள் யுத்தத்தை விரும்பவில்லை. இலங்கையில் இனப் பிரச்சினை இருக்கிறது. அதனால் தமிழ் மக்கள் - குறிப்பாக விடுதலைப்புலிகள் ஆயுதம் தூக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் முதலில் சமாதானம் ஏற்படவேண்டும். அதன்பிற்பாடே அபிவிருத்திக்கான முயற்சிகளை எடுக்கவேண்டும்.

எனது வடபகுதி வருகையின்போது சமாதானத்திற்கான சிறிய கதவு திறக்கப்பட்டதையும் கூறிவைக்க விரும்புகிறேன்.

கடந்த வருடம் நிகழ்ந்த கைதிகள் விடுவிப்பு தென்னிலங்கை மக்களிடையே பெரும் மகிழ்ச்சியையும், மனமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்றார்.

அவர் மேலும் குறிப்பிடும்போது கொழும்பு திரும்பியதும் இங்குள்ள நிலைமைகளை அங்குள்ள புத்திஜீவிகளுக்கு எடுத்துக்கூறுவேன்.

புத்தபிக்குகள் இனப்பிரச்சினை தொடர்பாக குறிப்பிடுபவை சிங்கள மக்கள் மத்தியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தாது. புத்தபிக்குகள் மத்தியில் பல அணிகள் உண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருத்தைக் கொண்டுள்ளன என்றார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இவ்வாறான வருகைகள் மூலம் அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மீண்டும் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை உருவாகலாம் எனக் கருதுகிறேன்.

தென்னிலங்கைப் பத்திரிகைகள் சில எனது வடபகுதி வருகையை விமர்சித்துள்ளன என்றார்.

## வீரச்சாவு



லெப். திருநேசன் (சுந்தர்)

மட்டக்களப்பு மாவட்டம் மகிழவெட்டுவான் நெல்லிச்சேனை என்னும் இடத்தில் கடந்த 31ஆம் திகதி காலை 9.00 மணியளவில் சிறிலங்கா

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி ஏற்றிய

## தேசியக் கொடிக்கே மரியாதை செய்யவேண்டும்

(கொழும்பு)

நேற்றுக் காலை நடைபெற்ற சிறிலங்கா சுதந்திர தின வைபவத்தில் சுதந்திர சதுக்கத்தை சுற்றி அமைக்கப்பட்டிருந்த கொடித்தம்பங்களில் சிறிலங்கா தேசியக் கொடி எதுவும் காணப்படவில்லை. இத்தம்பங்களில் பிராந்தியக் கொடிகளே பறக்க விடப்பட்டிருந்தன.

ஜனாதிபதியினால் ஏற்றிவைக்கப்படும் தேசியக் கொடிக்கே இம்முறை கௌரவம் அளிக்கப்பட வேண்டும் என்ற வகையிலேயே இம்முறை முதல் முறையாக சுதந்திர சதுக்கத்தில் சிறிலங்கா தேசியக் கொடிகள் பறக்கவிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் இம்முறை சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற சுதந்திரதின வைபவங்களை பார்வையிட வந்த பொதுமக்களுக்கும் ஆசனங்கள் போடப்பட்டிருந்தன.

# கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கைதாவது மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் பொலிசாரால் கைதுசெய்யப்படுவது மீண்டும் அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் முதல் மேற்படி பகுதிகளுக்குள் திடீர் திடீர் என்று நுழைந்து கொள்ளும் பொலிஸ் கோஷ்டியினர் தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் கண்டபடி கைது செய்து தம்முடன் அழைத்துச் செல்கின்றனர்.

இவ்வாறு பெருமெடுப்பிலான கைது செய்யும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக கொழும்பு நகரில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வாரம் முதல் கைது செய்யப்பட்ட எவரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை என்றும் மேற்படி தகவல்கள் கூறுகின்றன. கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தினசரி பொலிஸ் நிலையத்திற்குச் சென்று [illegible]மாற்றத்துடன் திரும்புவதாகவும் கூறப்படுகிறது. கைது செய்யப்பட்டவர்கள் தேர்தலின் பின்னரேயே விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் கூறப்படுகிறது.

## கிளிநொச்சி ஆஸ்பத்திரியை ஆயர் பார்வையிட்டார்

(கிளிநொச்சி)

அங்கிலிக்கன் ஆயர் அதிவண. கென்னத் பெர்னாண்டோ நேற்றுக்காலை விமானக் குண்டு வீச்சினால் சேதமுற்ற கிளிநொச்சி ஆஸ்பத்திரியை பார்வையிட்டார். வைத்திய அதிகாரிகள் சேத விபரங்களை எடுத்துக் கூறினர். அரசியல்துறை நடுவப் பணியக வன்னிப் பெருநிலப் பரப்பு பொறுப்பாளர் எழிலரசன் மற்றும் அதன் துணைப் பொறுப்பாளர் மதன் ஆகியோரும் அங்கு சமுகமளித்திருந்தனர்.

## மட்டு மாவட்டத்தில் தேர்தல் தேவையற்றது

### ஞானானந்ததேரோ தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இப்போது உள்ளூராட்சி தேர்தல் தேவையற்றது என அங்குள்ள ஞானானந்த தேரோ என்பவர் கூறியுள்ளார். இன்று தேர்தலை விட எத்தனையோ விடயங்கள் இம் மாவட்ட மக்களுக்குச் செய்ய வேண்டியுள்ளதாகவும் அவர்களுக்கு வாழ வழியில்லை எனவும் அவர் கூறினார்.

இந்நிலையில் தேர்தல் நடத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதது. தேர்தலின் பின்னே மக்கள் உயிருக்கு ஆபத்துண்டு எனவும் அவர் கூறினார்.

## வரி விளம்பரம்

### கோல்டன் கொமட் கோழிகுஞ்சுகள் விற்பனை

CHRISTOMBU FARMGOLDEN COMET,PULLETS, COCARELS கோல்டன் கொமட் பேட்டுக் குஞ்சுகள் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு' 'மல்லிகாபதி' சந்தை கிழக்குஒழுங்கை மானிப்பாய் (7414)

### சைனீஸ் உணவு சேவை

மதிய உணவு-மீன், இறைச்சி, முட்டை, மரக்கறி - 11. 30- 2. 00 திருமணம், பிறந்த நாள், பிரியாவிடை, புரியாணி பிறைட் றைஸ், பிறைட் நூடில்ஸ், சிற்றுண்டி வகை நாட வேண்டிய முகவரி: KARUNIYA CHINESE HOTEL 166, IST CROSS STREET JAFFNA. (7384)

### தவறிவிட்டது

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பா. நீக்லஸ் என்பவரது 540344175V இலக்க அடையாள அட்டையும், நீ. மேரி அஞ்சலா என்பவரது 576511914V இலக்க அடையாள அட்டையும் வீதியில் தவறிவிட்டன; கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்; (7420)

### விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

ஆயுர்வேத திணைக்களம் ஆரம்ப தர 'ஆ' பிரிவிற்கான வைத்திய அதிகாரி பதவிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

18 முதல் 40 வயதிற்கு உட்பட்டவர்கள் எதிர்வரும் 11-ம் திகதிக்கு முன் ஆயுர்வேத ஆணையாளர், ஆயுர்வேத திணைக்களம் 325, கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை, கொழும்பு- 8 எனும் முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

இவ் விண்ணப்பம் தொடர்பான மேலதிக விபரங்கள் அடங்கிய வர்த்த மானியை கடமை நேரங்களில் யாழ் செயலக மேலதிக அரசாங்க அதிபர் பணிமனையில் பார்வையிடலாம் எனவும் தெரி

---

யாழ்ப்பாண மாநகரசபை

குடிநீர் தாங்கிகள்

## கொள்வனவுக்கான கூறுவிலை

ஃ ஃ ஃ ஃ ஃ ஃ

கீழ்க்காணும் அளவுகளையுடைய நீர்த்தாங்கிகளை கொளவனவு செய்வதற்கான கூறுவிலைகள் எம்மால் கோரப்படுகின்றது;

01; உழவு இயந்திர இழுவைப்பெட்டி அடிச்சட்டத்தில் பொருத்தக் கூடியதான 1000 கலன் கொள்ளளவுள்ள $\frac{1}{8}$'' தடிப்பான மெல்லிரும்புத் தகட்டினாலான நீர்த்தாங்கி,

02. 400 கலன் நீர் கொள்ளளவுடைய $\frac{1}{8}$'' தடிப்பான கல்வனைஸ்ட் தகட்டினாலான கொள்கலன்;

03. 200 அல்லது 400 கலன் நீர் கொள்ளளவுடைய பிளாஸ்டிக்கினாலான கொள்கலன்.

மேற்குறித்த அளவிலான கொள்கலன்கள் வைத்திருப்போர் அவற்றின் எண்ணிக்கையையும், ஒன்றிற்கான விலையையும் உள்ளடக்கிய தமது கூறுவிலையை எதிர்வரும் 11-02-94ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். கூறுவிலையுடன் தாங்கியின் வடிவமைப்பினைக் காட்டும் வரைபடம் ஒன்றும் இணைக்கப்படுதல் வேண்டும்.


மாநகரசபை அலுவலகம், யாழ்ப்பாணம்; 03-02-1994

மாநகர ஆணையாளர் யாழ்ப்பாணம்;

(சி | 8510)

---

## 3ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



### 2-ம் லெப்டினனட் இலங்கேஸ்

(மாசிலாமணி சிறீதரன்)

மண்ணின் மைந்தனாக 06 - 05 - 1972

மாவீரனாக 05 - 02 - 1991

அன்னை தந்தை அன்பை மறந்து
அண்ணன்வழி நீ பறந்தாய்
அண்ணன் அண்ணி பாசம் துறந்து
ஆயுதம்தான் பெரிது என்றாய்
இன்னல் கண்டு நீ வெகுண்டாய்
ஈழப்போரில் நீ சரிந்தாய்
உன்னை எண்ணித் தம்பி தங்கை

---

25,000 தக்காளிக் கன்றுகள்

## முற்றிலும் இலவசம்

ஒவ்வொரு ஜாம் போத்தல் ஒப்படைக்கும் போதும் ஜாம் போத்தலுக்குரிய பணத்தைப் பெறுவதுடன் 5 தக்காளிக் கன்றுகளை முற்றிலும் இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள். இச் சலுகை கன்றுகள் உள்ளவரை மட்டுமே.

TASTE LINE INDUSTRIES (PVT.) LTD.

14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்-

(இ-8503)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



பாசத்தின் மடியில்: 20 — 08 — 1969

பாசறை அடியில்: 05 — 02 — 1991

### கப்டன் அக்பர்

(மாணிக்கம் யோகேஸ்வரன்)

பறவைகள் ஓலமிடுகின்றன.
அந்தோ! கீழ்வானம் சிவக்கிறது.
உங்கள் கனவு நனவாக
விடியலுக்கு நேரம் வந்துவிட்டது.

கெற்பெலி, மிருசுவில்.

பெற்றோர், சகோதர குடும்பத்தினர்.

(5088)

---

யாழ்- மாவட்ட வாடகை கார் உரிமையாளர் அனைவருக்குமான

## முக்கிய அறிவித்தல்

யாழ்- மாவட்டத்தில் வாடகைச் சேவையில் ஈடுபடும் மோட்டார் கார் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் 07- 02- 94 திங்கட் கிழமை அன்று காலை 10. 00 மணிக்கு யாழ்- மத்திய பஸ் நிலைய காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. முக்கிய விடயங்கள் பற்றி ஆராய வேண்டி இருப்பதால் சகல வாடகை மோட்டார் கார் உரிமையாளர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்

(7418)

---

## நன்றி நவில்கின்றோம்

டாக்டர் தியாகராஜாவின் தந்தையார்

### அமரர் சுப்பர் வைத்திலிங்கம் அவர்கள்

அமரர் சு. வைத்திலிங்கம் அவர்களின் மரண செய்தி கேட்டு உடன் வருகை தந்து உதவி செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள், அனைவருக்கும், மற்றும் மரணச்சடங்கிலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்துகொண்ட அனைவருக்கும் மரண சடங்கின் போது மலர் மாலைகள் அணிவித்தும் மலர் வளையங்கள் சாத்தியும் கண்ணீர் அஞ்சலிகள் - பிரசுரங்கள் மூலமாகவும் பத்திரிகை மூலமாகவும் வெளியிட்டும், அனுதாப செய்திகள் அனுப்பியும் தமது அனுதாபங்களை தெரிவித்த பொது ஸ்தாபனங்களுக்கும், கல்லூரிகளுக்கும், தனிப்பட்டவர்களுக்கும், சகல விதத்திலும் உதவி செய்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

''ராஜஸ்தான்'' இருபாலை, கோப்பாய்

டாக்டர் வை. தியாகராஜா குடும்பத்தினர்

வை. சுப்பிரமணியம் குடும்பத்தினர்

(7417)

---

## நினைவு கூருகின்றோம்..

### 1994-02-05

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்- பருத்தித்துறை முகாமிலிருந்து சிறிலங்கா ராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட 04 பெண்கள் உட்பட 08 தமிழர்கள்:

1987ஆம் ஆண்டு சிறிலங்கா ராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய-

- துரையப்பா குமாரசாமி (ஆயித்தியமலை - மட்டு)
- நாகமணி கந்தசாமி (மகிழவெட்டுவான் - மட்டு)

நந்தன் (நல்லதம்பி கோபாலகிருஷ்ணன் - 47/61 இயக்கச்சிசந்தி - பளை)

கண்ணன் (கந்தையா பாலகிருஷ்ணன்- பாபுவீதி, இத்தாவில் - பளை)

வினோதன் (வேலுப்பிள்ளை சுகுமார் - இயக்கச்சி சந்தி - பளை)

மேஜர் சிறீ (கதிர்காமத்தம்பி ராஜசிறீ - கல்வயல், சாவகச்சேரி - யாழ்)

மேஜர் சலீம் (அல்போன்ஸ் ஜோண் பிறின்ஸ்ரன்- பாசையூர் - யாழ்)

கப்டன் அக்பர் (மாணிக்கம் யோகேஸ்வரன் - கச்சாய் தெற்கு, கொடிகாமம் - யாழ்)

கப்டன் அஜித்தன் (சோழராசா ஜெகதீஸ்வரன்- இயற்றாலை, வரணி - யாழ்)

லெப். ஜேம்ஸ் (கந்தையா ஜெயக்குமார்- அராலி தெற்கு, வட்டுக்கோட்டை- யாழ்)

லெப். அசோக் (முருகன் இராசகுமார் - இடைக

செயலக மேலதிக அரசாங்க அதிபர் பணிமனையில் பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(சு. பா)

## பரிசளிப்பு விழா

நாவலர் வீதியிலுள்ள புதிய கல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் ஒரு மணியளவில் நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேலாயுதமும், சிறப்பு விருந்தினராக டாக்டர் நா. விமலகாந்தனும் கலந்து கொள்ளவுள்ளனர். சிறப்புரைகளுடன், கவியரங்கு, பட்டிமண்டபம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளது.

## போஷாக்கு உணவு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபைப் பகுதியில் இயங்கிவரும் பாலர் பாடசாலைகளில் கல்வி பயிலும் பாலர்களுக்கு போஷாக்கு உணவு வழங்கும் திட்டமொன்றை பருத்தித்துறை நகரசபை மேற்கொண்டுள்ளது. இதற்கிணங்க நகரசபை சுகாதார திணைக்கள அதிகாரிகளின் அனுசரணையுடன் சனசமூக நிலையங்களினால் நடாத்தப்பட்டுவரும் பாலர் பாடசாலைகளுக்கு பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் திரு. க. சண்முகநாதன் தலைமையிலான அதிகாரிகள் குழு நேரடியாக சென்றுபாடசாலைகளில் கல்வி பயிலும் பாலர்களின் உணவு போஷாக்கு பற்றி ஆராய்ந்து அறிக்கைகளைத் திரட்டி வருகின்றது. பருத்தித்துறை நகரசபைப் பகுதியில் இயங்கும் 14பாலர் பாடசாலைகளிலும் இப் போஷாக்கு உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமென்றும், இதற்கான நிதி பருத்தித்துறை நகரசபை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

---

ஈழப்போரில் நீ சரிந்தாய்
உன்னை எண்ணித் தம்பி தங்கை
ஊமைக்கண்ணீர் வடித்து நிற்பர்
எம்மைவிட்டு நீ பிரிந்தாய்
ஏற்றும் இதயக்கனியானாய்
மூன்று ஆண்டுகள் கழிந்தாலும்
நானிலம் போற்றும் நாயகன் ஆனாய்.

உன் நினைவில் வாழும்

அம்மா, அப்பா, அண்ணா, அண்ணி,
தங்கை, தம்பி,
அம்மம்மா, சித்திமார், சித்தப்பாமார்,

மீசாலை மேற்கு.

(7367)

---

## உன் பிறந்த நாளில் இனிய நினைவுகள்

தாயின் மடியில்
05-02-1970

தாயக மண்ணில்
11-11-1993



### லெப்டினன்ட் கலைஞன் (றகீம்)

(சுப்பிரமணியம் சத்தியசீலன்)

பூநகரி முகாமினுள்ளே
புலியெனவே புகுந்து
புறங்காட்டி எதிரிகளை
ஓடவைத்த வீரா!
பிறந்த மண்ணின் பெருமைதனை
சிறப்பாகவே காத்தாய்;
உந்தனுக்கு இந்த நாள்
உதித்த நாள் அல்லவோ!
வித்தாகி விழுந்தாலும்
விருட்சமாய் வெகுவிரைவில்
வளரும் நாளுக்காய்
வாழ்த்துகிறோம்! வாழ்க நீ!!

தபாற்பெட்டி வீதி,
இருபாலை
கோப்பாய்.

- குடும்பத்தினர்

(7411)

---

※ நாகமணி கந்தசாமி (மகிழவெட்டுவான் - மட்டு)

1988ஆம் ஆண்டு மட்டு - சேனைக்குடியிருப்புப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

துரை (முத்தையா வில்வராசா - நற்பிட்டிமுனை - அம்பாறை)

1989ஆம் ஆண்டு யாழ்- அச்சுவேலிப் பகுதியில் இனங்காணப்படாத நிலையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-

※ பேபி (தேவராணி முருகதாஸ் - மயிலணி, சுன்னாகம் - யாழ்)

யாழ்- வட்டுக்கோட்டை, சங்கரத்தைப் பகுதியிற் தேசவிரோதக் குழுவினரால் கொலை செய்யப்பட்ட,

நாட்டுப்பற்றாளரான,

கந்தசாமி சண்முகசுந்தரம் (நவாலி, மானிப்பாய் - யாழ்)

மற்றும் 04 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு யாழ் - தச்சன்காட்டுச்சந்தி சிறிலங்கா ராணுவ மினிமுகாம் தகர்ப்பு முயற்சியின் போது வீரச்சாவெய்திய-

சிவசோதி (கணபதிப்பிள்ளை ரவீந்திரன் - 1-ம் குறுக்கு வீதி- அம்பாறை)

லெப். மணிமாறன் (சின்னத்தம்பி பவளேந்திரராசா . பதுளை வீதி-மட்டு)

எட்வேட் (மயில்வாகனம் தயாபரன் மகிழடித்தீவு-மட்டு)

தயாநிதி (கணபதிப்பிள்ளை கந்தசாமி-வாகனேரி-மட்டு)

கோபு (கணபதிப்பிள்ளை சதாசிவம்- முதலைக்குடா - மட்டு)

நந்தன் (மார்க்கண்டு அழகவேல் - வேப்பவெட்டுவான் - மட்டு)

கரரூபன் (தயானந்தன் ரூபானந்தன் - ஊத்துச்சேனை - மட்டு)

வாகீசன் (பாலிப்போடி கந்தசாமி - முனைக்காடு - மட்டு)

ஐங்கரன் (பாலசிங்கம் விஜயரட்ணம் - துறைநீலாவணை - மட்டு)

ஐங்கரன் (துரையப்பா உதயன் - பக்கியெல்ல- மட்டு)

கப்டன் கேதீஸ் (பாக்கியராசா றொபேட் நிக்சன் பாரதிபுரம் - திருமலை)

கப்டன் தீபன் (சிவலிங்கம் ஜெயசீலன் - சாம்பல் தோட்டம் - திருமலை)

லெப். பேனாட் (அரவிந்தராசா நிர்மலன்-செல்வநாயகபுரம் - திருமலை)

றோஸ்மன் (தேவராசா ரவீந்திரராசா - நிலாவெளி - திருமலை)

கப்டன் திலக் (ரட்ணசபாபதி மகேந்திரராசா - 7-ம் வட்டாரம் - மணலாறு)

சுதாகர் (வெலிச்சோர் றொபேட் கெனடி - இலுப்பைக்கடவை - மன்னார்)

2-ம் லெப். நகுலேஸ் (குமாரசிங்கம் சத்தியசீலன் - செக்கடிப்புலவு -வவுனியா)

லெப். ஜேம்ஸ் (சந்தையா ஜெயக்குமார்- அராலி தெற்கு, வட்டுக்கோட்டை- யாழ்)

லெப். அசோக் (முருகன் இராசகுமார் - இடைக்குறிச்சி, வரணி-யாழ்)

லெப். சுதன் (சின்னப்பு யூட்ஜெயசீலன் -மிருசுவில் கொடிகாமம் - யாழ்)

2.ம் லெப். சலீம் (கதிரவேலு பூபாலசிங்கம் மட்டுவில்வடக்கு, சாவகச்சேரி - யாழ்)

2.ம்லெப். இலங்கேஸ் (மாசிலாமணி சிறீதரன் மீசாலை தெற்கு, சாவகச்சேரி - யாழ்)

அருள் (பொன்னையா விஜயசேகரன் - நாவற்குழிச் சந்தி, கைதடி - யாழ்)

தமிழ்மணி (இரத்தினம் நிரஞ்சன் - அக்பர்வீதி, கோண்டாவில் வடக்கு - யாழ்)

பாபு (கணபதிப்பிள்ளை காந்தராஜன்-சோரன்பற்று பளை - கிளிநொச்சி)

லிங்கவேந்தன் (அருளப்பு ஜெனிசியஸ் - பூங்கா வீதி, குருநகர் - யாழ்)

சதான் (ஆறுமுகம் இராஜேந்திரம் - இயற்றாலை, வரணி - யாழ்)

யோகர் (வாரித்தம்பி சசிக்குமார் - கைதடி மேற்கு, சாவகச்சேரி - யாழ்)

1992ஆம் ஆண்டு மட்டு - அலியாரோடைக்குச் சென்றுகொண்டிருக்கையில், பாவற்கொடிச்சேனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில வீரச்சாவெய்திய-

வதனலிங்கம்-சதானந்தர் (குருலோகன் சிவகுமார் - கல்முனை - அம்பாறை)

செல்வம் (செல்வராஜா சந்திரகுமார் - நாவிதன்வெளி, கல்முனை - அம்பாறை)

இதே மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஏறாவூர் தளவாயைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1993ஆம் ஆண்டு திருமலை -புல்மோட்டைப் பகுதியில் ரோந்துசென்ற சிறிலங்கா இராணுவ அணி மீது மேற்கொண்ட தாக்குதலில் விழுப்புண்அடைந்திருந்து வீரச்சாவெய்திய-

2 ம் லெப். தங்கப்பன்-விஷ்ணு (முருகப்பன் ஜெயச்சந்திரன் - சீனவகுடா - திருமலை)

ஏழாலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் ஏவப்பட்ட எறிகணைத்தாக்குதலில் காயமுற்று மருத்துவமனையில் மரணமான வயோதிபர் ஒருவர்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

※ இக்குறியிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(இ-8511)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

வாய்மையை கண்டறிவது, நல்லதை நடைமுறையில் செய்வது, இவை இரண்டுமே தத்துவத்தின் தலையாய அம்சங்கள்.

- வால்ட் டேய்த்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05-0?-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## பக்க விளைவுகள்

படையை விட்டு ஓடிய இராணுவத்தினரைத் தேடிக் கண்டுபிடிப்பதே இன்று சிறிலங்கா இராணுவத்தினரின் முக்கிய பணிகளில் ஒன்றென இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன; சிறிலங்கா ஆயுதப்படையில் இருந்து தப்பி ஓடியவர்களின் எண்ணிக்கை 22,500 ஆக இருக்கையில் இதனை முக்கியமற்ற தொன்றெனப் புறக்கணித்து விடமுடியாதுதான். ஏனெனில் இத்தொகையானது சிறிலங்கா ஆயுதப் படையில் குறிப்பிடத்தக்க கணிசமான அளவாகும்.

ஆனால் எந்த ஒரு நடவடிக்கைக்கும் எதிர் விளைவும், பக்கவிளைவும் இருந்தே ஆகும். இந்நிலையில் இராணுவத்தில் இருந்து தப்பியோடுவதென்பது விடுதலைப்புலிகளின் தாக்குதலினால் விளைந்துள்ள எதிர் விளைவே ஆகும். சிறிலங்கா இராணுவத்தின் சம்பள மட்டமானது மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்து மிகவும் உயர்வானதாகும். அத்தோடு வசதிகளும் நிரம்பப் பெற்றுள்ள இராணுவமும் ஆகும், மேலும் சட்டப் பாதுகாப்பு நிறையவே அதற்கு உள்ளது.

இந்நிலையிலும் இராணுவத்தில் இருந்து தப்பி ஓடுகின்றார்கள் என்றால் அது தமது உயிருக்கு அஞ்சிய ஓட்டமே தவிர வேறு எதுவுமில்லை. அதாவது இவ் யுத்தத்தில் வெற்றி பெறுவோம் என்றோ அன்றி, இதில் இருந்து தப்பி உயிர்வாழ்வோம் என்ற நம்பிக்கை இன்மையே காரணமாகும்.

அத்தோடு இவர்கள் ஓடுவது வதந்திகளினாலோ அன்றி ஆராயப்படாமலோ எடுக்கப்பட்ட முடிவுமல்ல, ஏனெனில் ஓடியவர்களில் சாதாரண சிப்பாய்கள் மட்டுமல்ல, நூற்றிற்கு மேற்பட்ட அதிகாரிகளும் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

'வானில் பறக்கலாம்' 'கடலைக்கலக்கலாம்' 'தரையில் பவனி வரலாம்' என்றே சிறிலங்கா அரசாங்கம் ஆயுதப் படைக்கான ஆட்சேர்ப்பிற்குப் பிரசாரம் செய்கின்றது; சிங்கள இளைஞர்களும், இராணுவத்தில் சேர்வதென்பது உல்லாச வாழ்வின் ஒரு பகுதி

## சமாதானமாக வாழ்வதற்காக சரணாகதி அடையக்கூடாது

- தொண்டமான்

(கொழும்பு)

சமாதானமாக வாழ வேண்டும் என்பதற்காக நாம் சரணாகதி அடைந்துவிடக் கூடாது. இவ்வாறு இ.தொ.காவின் தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் கூறியுள்ளார்.

தொளஸ்பாகை நகரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்,

மத்திய மாகாணசபை விவகாரத்தில் நாம் எமது சக்தியை அரசாங்கத்திற்கு காட்ட நினைத்து செயற்பட்டோம். இதன் மூலம் அரசாங்கம் எமது மக்களுக்கு வழங்குவதாக ஏற்கனவே ஒதுக்கிக் கொண்டிருந்த காணி மற்றும் வீட்டுப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே எமது நோக்கமாக இருந்தது. ஆனால் இந்த நோக்கத்தை அடைவதற்கு எம்மவர்களே எதிராக இருந்து செயற்பட்டு விட்டனர். எனவே தான் தேசியசபை இவர்களுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியது. செல்லச்சாமி இன்று தான் போகும் இடமெல்லாம் எனது தலைவர் தொண்டமான் என்று கூறும் அதே வேளையில் எனக்கு எதிராகவும் செயற்படுகின்றார். இ. தொ. காவின் தேசிய சபை என்பது திருச்சபை போன்றது. அச் சபை எடுத்த முடிவுக்குஅனைவரும் கட்டுப்பட்டாக வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களதும், இ.தொ.காவினதும் பலத்தை இன்றைய ஜனாதிபதி உணர்ந்து கொள்ளவில்லை. அதனை எடுத்துக் காட்டவே மத்திய மாகாண முதல்வருக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வரும்படி காமினி திசநாயக்காவிடம் கோரினேன். நான் தலைவர் என்ற முறையில் மாகாண சபை உறுப்பினர்கள் மீது நம்பிக்கை வைத்திருந்தேன். ஆனால் அவர்கள் எமது சமூகத்தை காட்டிக்கொடுப்பார்கள் என நான் நினைக்கவில்லை. இந்த நிலையை அனுமதிக்க முடியாது. நாம் சமாதானமாக வாழவேண்டும் என்பதற்காக சரணாகதி அடையக் கூடாது. உரிமையோடு இந்த நாட்டில் வாழ வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## புத்தத்தை பின்பற்றுவோர் யுத்தத்தை ஆதரிக்கலாமா?

-பத்தேகம சமித்த தேரோ கேள்வி

(கொழும்பு)

புத்த சமயத்தை பின்பற்றுவதாகக் கூறுபவர்கள் எவ்வாறு மக்களைக் கொன்று குவிக்கும் யுத்தத்தை நடத்த முடியும்? எவ்வாறு அதனை ஆதரிக்கவோ ஆசிர்வதிக்கவோ முடியும்? இவ்வாறு வண. பத்தேகம சமித்த தேரோ கூறியுள்ளார்.

தென் மாகாண சபைத்தேர்தலில் நவசமசமாஜக் கட்சி கார்பில் போட்டியிடும் அவர் காலியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது: முதலமைச்சர் பதவி தருவதாக உறுதிகூறி பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தம்முடன் இணைந்துபோட்டியிடுமாறு என்னைஅழைத்தது நான் எனது புகழைப் பெருக்குவதற்காக இத் தேர்தலில் போட்டியிடவில்லை வடக்கு-கிழக்கு பகுதியில் நடக்கும் யுத்தத்திற்கு எதிராக பிரசாரம் செய்யவே இத்தேர்தலில் போட்டியிடுகிறேன் எனத் தெரிவித்தார். அத்துடன் பிரிட்டன் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடிய குடிப்பொல பரம்பரையைச் சேர்ந்தவன் நான் என்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவதில் தவறேதுமில்லை எனவும்தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் உரையாற்றிய கலாநிதிவிக்கிரமபாகு கருணாரத்ன தமது உரையில்; சுதந்திரக்கட்சியின்தலைமையிலான மக்கள் முன்னணியும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதிலும் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் யுத்தத்தை பொறுத்தவரையிலும் இன்றைய ஐ. தே. க. கடைப்பிடிக்கும அதே அணுகுமுறையே கடைப்பிடிக்க சித்தமாயிருக்கிறது எனத் தெரிவித்தார். வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கு எதிராக மக்களை அணிதிரட்டுவதற்காகவே தமது கட்சி தனித்துப் போட்டியிடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மக்கள் குடியிருப்புமீது குண்டுவீச்சிற்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் குடியிருப்பு, அவ... வதன் மூலமும் பின்னர் அது

### வீதிவிளக்குகள் விஷமிகளால் சேதம்

பருத்தித்துறை நகரசபையால் வீதி விளக்குகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் பருத்தித்துறைநகரில் அமைக்கப்பட்ட 10 வீதி விளககுகளில் இரண்டு வீதி விளக்குகள் விஷமிகளினால் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

### விளையாட்டுப் போட்டி

அராலி இந்துக்கல்லூரி வருடாந்த இல்ல (பெய்வல்லுநர்) விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கல்லூரி அதிபர் திரு. எஸ். செலவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

சங்கானைக் கோட்டக் கல்வி அதிகாரி திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் சங்கானை வட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. மு. முருகன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

மூத்த விநாயகர் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தின்

பூநகரியில்

## காயமடைந்த சிப்பாய் வைத்தியசாலையில்மரணம்

(கொழும்பு)

இராணுவ வைத்தியசாலையின் மலசல கூடத்தில் தடக்கி விழுந்த இராணுவ சிப்பாய் ஒருவர் அவ்விடத்திலேயே மரணமடைந்துள்ளார்

பூநகரி இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலின்போது வயிற்றுப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டினால் காயப்பட்ட நிதினுவாங்கொடையைச் சேர்ந்த நியூட்டன் நிசாந்த (24 வயது) என்ற சிறிலங்கா இராணுவ சிப்பாயே இவ்வாறு மரணமடைந்தவராவார்

மலசல கூடத்திற்கு இரவு நேரத்தில் சென்ற போது தடுக்கி விழுந்த இவர் அதிகாலையில் மலசல கூடம் கழுவப்படும்போது சடலமாகக் கிடக்க கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

## தொண்டமானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும்

ஐ. தே. கவில் சிலர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரும், அமைச்சரவை உறுப்பினருமான சௌ. தொண்டமானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஐ தே. கவின் சில தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனராம்.

அமைச்சராக இருந்த அதே வேளையில், மத்திய மாகாணத்தில் ஐ. தே. கவின் முதலமைச்சரான டபிள்யூ பி.பி. திசநாயக்காவிற்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்கப் போவதாக தெரிவித்திருந்ததை யடுத்தே இந்நிலை தோன்றியுள்ளது.

கட்சி நடைமுறைக்கு அமைய இவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் பலர் தலைமைப் பீடத்தை வலியுறுத்தி வருகின்றனராம்.

## போரதீவு சுற்றிவளைப்பு பொதுமக்கள் பலர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் சில கிராமங்களை சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ தேசத்துரோகிகளும் இணைந்து சுற்றிவளைத்து பொதுமக்களைக் கைது செய்து விசாரணை செய்ததுடன் ஒருவரை தடுத்து வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 30-ம் திகதி அதிகாலை 5 மணியளவில் பெரிய போரதீவு இராணுவத்தினரும் ரெலோ துரோகிகளும் இணைந்து கோவில் போரதீவு, பெரிய போரதீவு, முனைத்தீவு ஆகிய கிராமங்களை திடீரெனச்சுற்றி வளைத்து தீவிர தேடுதல் வேட்டையை மேற்கொண்டனர்.

இதன்போது மேற்படி கிராமங்களைச்சேர்ந்த பலபொதுமக்களை காளி கோவிலுக்கு அழைத்துச்சென்று தீவிர விசாரணைக் குட்படுத்தினர்.

இவ்விசாரணையின் முடிவில் பெரிய போரதீவைச் சேர்ந்த நான்குபிள்ளைகளின் தந்தையான சாமித்தம்பி பரமானந்தம் (வயது 37) என்பவரை மட்டும் தடுத்து வைத்துக் கொண்டு ஏனையோரை விடுதலை செய்துள்ளனர்.

## மருத்துவ கொள்கலன்கள் காங்கேசனில்இறக்கப்பட்டன

தீவகத்திற்கென பிரிட்டிஷ் அரசினால் வழங்கப்பட்ட மருத்துவ கொள்கலன்கள் காங்கேசன்துறையில் இறக்கியதாக அறியமுடிகிறது.

கடந்த திங்களன்று பருத்தித்துறை இறங்குதுறையில் பொருள்களை இறக்கி விட்டு டார்ந்தும் பொருள்களை இறக்கி வருகிறது.

(யோ)

### கண்டெடுப்பு

புனித பத்திரிசியார் கல்லூரி மாணவரான ஆ. தீபன்

யுள்ளமை குறிப்பிடத் தக்கது.

'வானில் பறக்கலாம்' 'கடலைக்கலக்கலாம்' 'தரையில் பவனி வரலாம்' என்றே சிறிலங்கா அரசாங்கம் ஆயுதப் படைக்கான ஆட்சேர்ப்பிற்குப் பிரசாரம் செய்கின்றது; சிங்கள இளைஞர்களும், இராணுவத்தில் சேர்வதென்பது உல்லாச வாழ்வின் ஒரு பகுதி என்றே சேர்ந்து கொண்டனர். யுத்தத்தின் கடுமை பற்றியோ, அதனால் விளையும் துயர் பற்றியோ அவர்களுக்கு எடுத்துக் கூறப்படவுமில்லை; அவர்கள் அறிந்திருக்கவுமில்லை;

இந்நிலையில் யுத்தம் கொடியதாக அவர்கள் முன் விரிந்த போது அவர்கள் அதிர்ந்து போனார்கள்; தமிழர் தாயகத்தில் இருந்து பொன்னும், பொருளும் கிட்டும் என எண்ணி வந்தவர்களுக்கு சகாக்களின் சடலங்கள் அச்சம் ஊட்டுபவையாகவே இருந்தன. கடலிலும், வானிலும், தரையிலும் பறக்கலாம், பவனி வரலாம் என்ற எண்ணங்கள் முகாம்களுக்குள்ளும் பங்கர்களுக்குள்ளும் முடங்கிய போது கற்பனையானது;

இந்நிலையில்தான் சிப்பாய்களும், அதிகாரிகளும் இராணுவத்தை விட்டு ஓடத் தொடங்கினர்; உயிருக்கு உத்தரவாதம் அற்ற தொழிலில் அவர்களால் இருக்க முடியவில்லை. ஆனால் இது சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து பெரிதும் ஏமாற்றம் அளிக்கும் ஒன்றாகவே இருக்கும் என்பதில் ஆச்சரியமில்லை. இனவாதப் போதனை மூலம் உணர்ச்சியூட்டப்படும் சிங்களச் சிப்பாய்கள் துள்ளி எழுந்து விடுதலைப் புலிகளை தோல்வியுறச் செய்வார்கள். பேரினவாத அரசை இலங்கைபூராவும் நிலைநாட்டலாம் என்றே சிங்கள பேரினவாதம் எண்ணியிருந்தது;

இதேவேளை சிப்பாய்களின் ஓட்டத்தால் எழுந்த பக்கவிளைவானது சமூகத்தில் சமூகவிரோதச் செயல்களை அதிகரித்துள்ளது; இதற்கு அரசு அளித்த பயிற்சியும் ஆயுதங்களும் பயன்படுகின்றன; இதனை இராணுவத்தில் சேர ஐந்தாம் வகுப்பு போதும் என விளம்பரப்படுத்தும் போதும் அவர்கள் சிந்தித்திருக்க வேண்டும். தமிழர் வீடுகளைச் சூறையாடுவதையும் தமிழ்ப் பெண்கள் சீரழிக்கப்படுவதையும் எதிர்பார்த்தவர்களுக்கு தற்பொழுது, சிங்களவர் மத்தியில் அவை உருவானதற்குத் தாமே காரணமாக இருந்துள்ளமை வேதனை அளிக்காமல் வேறு எதை வழங்கமுடியும்?

ஆனால் இது மட்டுமல்ல, எவ்விடயத்திலும் சிறிலங்கா அரசு பக்கவிளைவுகளைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை; சிந்திப்பினும் இவ்விடயங்கள் அதன் சிந்தனையில் எட்டுவதும் இல்லை; ஏனெனில் அதன் சிந்தனையில் இருப்பதெல்லாம் பேரினவாத சித்தாந்தமும், இனப்படுகொலை புரிவது பற்றிய எண்ணமுமே ஆகும்; இந்நிலையில் இவற்றால் வரும் பக்கவிளைவுகளையும் அவை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். நாய் வாலை நிமிர்த்துவது எப்படி?

# மக்கள் குடியிருப்புமீது குண்டுவீச்சிற்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் குடியிருப்பு, ஆலயங்கள் மற்றும் பொது இடங்கள் மீது படைகள் மேற்கொள்ளும் விமானக் குண்டு வீச்சு மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் குறித்து சிறிலங்கா அரசு பல்வேறு காரணங்களைக் கூறி நியாயப் படுத்த முயல்கின்றது

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தற்போது தங்கியிருந்து இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு வரும் மெதடிஸ்த திருச்சபைக்குழுவில் ஒருவரான அருட்திரு. பிலிப் பெர்னாண்டோ தெரிவித்தார். இவர் இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் செயலர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் பகுதிகள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்திச் சேதங்களை ஏற்படுத்தி வந்தபோது, தாம் அதுபற்றி அரசிடம் வினா எழுப்பி வந்ததாகவும் தெரிவித்த அவர், பல்வேறு காரணங்கள் கூறுவதன் மூலமும் பின்னர் அது நியாயப்படுத்தப் படுவதாகவும் கூறினார்.

அவர்மேலும்தெரிவிக்கையில் நல்லெண்ண முயற்சியை மேற்கொண்டு யாழ். வந்துள்ள தமது குழுவினர், முன்னர் அரச தரப்பினர் எவருடனும் இந்த விடயம் பற்றிப் பேச்சு நடத்தவில்லை எனவும் சகல மதப் பிரதிநிதிகளுடன் மட்டுமே பேச்சு நடத்தியிருந்ததாகவும் குறிப்பிட்டார்.

நல்லெண்ண சூழ்நிலை ஒன்று உருவாகும் பட்சத்தில் ஏனைய மதப் பிரதிநிதிகளுடனும் ஆலோசனை கலந்து அவர்களின் ஆதரவைப் பெற்றுச் சமாதான முயற்சிகளை இலகுவாக மேற்கொள்ள முடியும். இத்தகையதொரு சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் சர்வதேச மத்தியஸ்தத்தை நிராகரித்திருக்கும் அரசுக்கு மதங்களின் சார்பில் அழுத்தத்தைக் கொடுக்க முடியும் இவ்வாறு அருட் திரு. பிலிப் பெர்னாண்டோ தெரிவித்தார்.

# ஆங்கில ஆசிரியர் பயிற்சி யாழ்ப்பாணத்தில் நடக்கும்

(யாழ்ப்பாணம்)

1993ஆம் ஆண்டு நடந்த ஆங்கில ஆசிரியர் தேர்வுப் பரீட்சையில் சித்தியடைந்து பயிற்சி பெறத்தவறியவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

மேற்படி தேர்வு பரீட்சையில் சித்தியடைந்து வவுனியா "டெலிக்" நிலையத்தில் ஒரு வருட பயிற்சிபெறுமாறு அறிவிக்கப்பட்டு இதுவரை அங்கு பயிற்சிபெறச் செல்லாதோருக்கே இங்கு பயிற்சி வழங்கப்படுமென கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

எனவே இதுவரை வவுனியா "டெலிக்" நிலையத்தில் பயிற்சிபெறச் செல்லாத பயிலுனர்கள் இங்கு இடம் பெற இருக்கும் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறலாம் எனவும் இவ்வகுப்புக்கள் பங்குனிமாதம் 15ஆம் திகதியளவில் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (பா)

## உதைபந்தாட்டம்

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிச் சுற்றின் இன்றைய ஆட்டம் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும் போது டயமன்ஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து விநாயகர் விளையாட்டு கழகம் விளையாடவுள்ளது;

## பொதுக்கூட்டம்

மூத்த விநாயகர் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தின் போது புதிய நிர்வாகிகள் தெரிவு உட்பட பல்வேறு முக்கிய விடயங்கள் பற்றி ஆராயப்பட இருப்பதால் அங்கத்தவர்கள் அனைவரும் பங்குபற்றும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அரசினால் வழங்கப்பட்ட மருத்துவ கொள்கலன்கள் காங்கேசன்துறையில் இறக்கியதாக அறியமுடிகிறது.

கடந்த திங்களன்று பருத்தித்துறை இறங்குதுறையில் பொருள்களை இறக்கி விட்டு காங்கேசன்துறைக்குச் சென்ற 'வாதுவ' கப்பல் செவ்வாயன்று பருத்தித்துறைக்கு வராமல் அங்கேயே கொள்கலன்களை இறக்கியதாக அறிய முடிகிறது.

'கோமாரி' கப்பல் தொ

இறக்கி வருகிறது.

(யோ)

## கண்டெடுப்பு

புனித பத்திரிசியார் கல்லூரி மாணவரான ஆ. தீபன் திலீசன் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட கைக்கடிகாரம் ஒன்று எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

# சேர்பியா மீதான விமானத் தாக்குதல் ரஷ்யாவிற்கு எதிரான யுத்த பிரகடனம்

### - தீவிர வலதுசாரி ஷிரினோவ்ஸ்கி எச்சரிக்கை

(பெல்கிரேட்)

பொஸ்னிய சேர்பியர்கள் மீது நேட்டோ நாடுகள் விமானத் தாக்குதல் நடத்தப்படுமானால் அதனை ரஷ்யாவுக்கு எதிரான யுத்தப் பிரகடனமாகவே தமது கட்சி கருதும் என்று ரஷ்யாவின் தீவிர வலதுசாரித் தலைவரான ஷிரினோவ்ஸ்கி கூறியுள்ளார்.

அசாதாரணமான வகையில் நிருபர்கள் மாநாடு ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில்; பொஸ்னியாவில் எந்த நகரத்தின்மீதும் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டால் அது ரஷ்யாவுக்கு எதிரான யுத்தப் பிரகடனமாக கருதப்படும் என எல்லா அரசாங்கங்களுக்கும் எச்சரிக்கைவிடுத்தார். ரஷ்ய ராணுவம் இன்னும் ஐரோப்பாவில் இருக்கிறது என்றும், அது நீண்ட காலம் இருக்கும் என்பதையும் எவரும் மறந்துவிடக்கூடாது எனவும் தெரிவித்த அவர், ரஷ்யா சேர்பியாவின் நண்பன் என்றும் எந்த சமயத்திலும் அதன் உதவிக்கு வரும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் வைதீக கிறிஸ்தவ மதத்தை பின்பற்றும் சேர்பியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையேயான சரித்திரபூர்வமான தொடர்பையும் அவர் நினைவு படுத்தினார். எதிரிகள் எங்களுக்கு அஞ்சும் நிலை ஏற்படும். பாரிசிலும், லண்டனிலும், வாசிங்டனிலும், டெல் அவிவிலும் அவர்கள் நிம்மதியோடு இருக்க மாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்ததுடன் முன்னாள் யூகோசெலவாக்கியாவிலிருந்து சகல வெளிநாட்டு துருப்புகளும் மீளப்பெறப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

## மத்தியாசிய உறுதிப்பாட்டிற்கு ஆப்கான் போரால் ஆபத்து

### கரிமோவ் தெரிவிப்பு

(டவோஸ்)

இஸ்லாமிய அடிப்படைவாதமும், ஆப்கானிஸ்தானின் சண்டையும் முழு மத்திய ஆசியப் பிராந்தியத்தினதும் ஸ்திரத்தன்மையைப் பாதிக்கச் செய்வதாக இருக்கிறது என்று உஸ்பெஸ்கித்தான் ஜனாதிபதி கரிமோவ் கூறியுள்ளார்.

உலக பொருளாதார கருத்தரங்கு ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், மத்திய ஆசியாவின் ஸ்திரத்தன்மைக்கு ரஷ்யாவே உத்தரவாதம் அளிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்;

## வியட்நாம் மீதான தடை அமெரிக்காவினால் நீக்கம்

### பில் கிளிண்டன் அறிவிப்பு

(வாஷிங்டன்)

முப்பது ஆண்டுகாலமாக வியட்நாம் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையை அமெரிக்க அதிபர் நீக்கியுள்ளார். அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்மாநாடுஒன்றில் இதனை அறிவித்த அதிபர் பில் கிளிண்டன் மேலும் கூறுகையில், தென் கிழக்கு ஆசியாவில் வியட்நாம் போரின் போதுகாணாமற் போன படையினர் பற்றி அறிவதில் கடந்த ஆண்டில் பெருமுன்னேற்றம் ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டார்

மன்னார் மாவட்டத்தில்

## தொண்டர் ஆசிரியருக்கு இன்னும் நியமனம்இல்லை

(மன்னார்)

மன்னார் பாடசாலைகளில் உள்ள 66 தொண்டர் ஆசிரியர்களின் பெயர்கள் கல்வி அதிகாரிகளால் சிபார்சு செய்யப்பட்டு கொள்கை திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அமைச்சுக்கு அனுப்பப்பட்டன. ஆனால், இதுவரை கல்விச் சேவைகள் ஆணைக்குழு இந்த ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கவில்லை என்று மன்னார் அரச அதிபர் கே. கணேசின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உத்தியோக பூர்வ அறிக்கைகளின் படி மன்னார் விவசாய திணைக்களத்தில் 15 வெற்றிடங்களும், உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் 8வெற்றிடங்களும், உள்ளூர் வர்த்தக திணைக்களத்தில்7 வெற்றிடங்களும், மாவட்டநீதி மன்றில் 11வெற்றிடங்களும்ஆரம்பநீதி மன்றில் 9 வெற்றிடங்களும், மீன் பிடித்திணைக் களத்தில் 16 வெற்றிடங்களும் தொழில் திணைக்களத்தில் 5 வெற்றிடங்களும், தபால் அலுவலகத்தில் 42 வெற்றிடங்களும், திட்டமிடல் திணைக்களத்தில் ஒரு வெற்றிடமும், மற்றும் சிறைச்சாலைத்திணைக்களத்தில் 9 வெற்றிடங்களும் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 பிரதேசச் செயலகங்களில் 136 வெற்றிடங்கள் உள்ளன. இதில் 16 வெற்றிடங்கள் நீர்ப்பாசனப் பிரிவிலும் (முருங்கன்) அதிகமான வெற்றிடங்கள் வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள திணைக்களங்களில் இருப்பதாகவும் உத்தியோக பூர்வ அறிக்கைகளிலிருந்து தெரியவருகிறது.

## சாவ. மருத்துவ மனைக்கு கண் சத்திரசிகிச்சைக் கருவி

சாவகச்சேரி அரசினர் மருத்துவ மனைக்கு கண் வெண்விழிப்படல சத்திர சிகிச்சை கருவி வந்துசேர்ந்துள்ளது.

லயன்ஸ் கழகத்தினரின் முயற்சியால் இக் கருவி எடுத்து வரப்பட்டதாக தெரிய வருகிறது.

இதனால் மேற்படி மருத்துவமனையில் இச் சிகிச்சை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று கூறப்படுகிறது. (86)

### இரும்புப்பிடி

யையே அவரின் சுதந்திரதின உரை எடுத்துக் காட்டுவதாக பி.பி.ஸி குறிப்பிட்டது.

ஆனால் விடுதலைப் புலிகளை நசுக்கி விடுவதால் தமிழர்களின் கூடுதல் தன்னாட்சி கோரிக்கைக்கு முடிவு காணப்படப் போவதில்லை. சுதந்திரம் பெற்ற இலங்கையின் வரலாறு இனவன்முறை நிறைந்தது இவ்வாண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. தெற்கில் சிங்கள மக்களின் வாக்கை கவரத்தக்க உரைகளை ஜனாதிபதி தொடர்ந்து நிகழ்த்தி வருகிறார். ஆனால் அவரின் இந்த உரைகள் சிறுபான்மையினருக்கு கவலையைத்தான் தரும் என பி.பி.ஸி மேலும் தெரிவித்தது.

### அரங்கேற்றம்

(குருநகர்)

செல்வன் மெற்றாஸ்மயில் கஜனின் மிருதங்க அரங்கேற்றம் இன்று மாலை 3மணிக்கு நல்லை ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறும். (21)

### போலி வியாபாரக்

கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்பதை அறியத்தருவதுடன் இவ்வாறான செயல்கள் பற்றிய தகவல்களை எழுத்து மூலமோ அல்லது 230, இராமநாதன்வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள எமது அலுவலகத்திற்கு நேரில்வந்தோ அறியத்தரும்படியும் பொதுமக்களிடம் தொழிற்துறை மேம்பாட்டுநிறுவனம் வேண்டியுள்ளது.

### உன்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

04.02.1994

### உதவிப் பொருள்கள்

(மல்லாகம்)

உடுவிலில் இயங்கிவரும் விழிப்புல வலுவிழந்தோரின் இல்லமான வாழ்வகத்திற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால்உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. இவ் வாழ்வகம் முன்னர் தெல்லிப்பழையில் இயங்கி வந்தது. பெரும் நிதி நெருக்கடியின் மத்தியிலும், இவ் வாழ்வகம் இயங்கிவருவதால், மனிதாபிமானமுள்ளோரின் உதவிகளைக் கோரியுள்ளதாக இவ்வாழ்வக நிர்வாகி தெரிவித்தார். (09)

### கட்டுத் துவக்கால் காயம்

(யாழ்ப்பாணம்)

பெரிய பன்றிவிரிச்சான் மடுவை சேர்ந்த வல்லிபுரம் ரவீந்திரன் (வயது 38) என்பவர் கம்பு வெட்டச் சென்ற சமயம் கட்டுத்துவக்குவெடித்ததில் காலில் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் பெரிய தம்பனை வயற்பகுதியுடன் சேர்ந்த காட்டில் கம்புகளை வெட்டச் சென்ற சமயம் வயலில் பன்றிகளுக்காக வைத்த கட்டுத்துவக்கில் தவறுதலாக சிக்கியபோது அது வெடித்ததனால் இவர் காயமடைந்தார். (சி), (ச)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகள் மீது கெடுபிடி

மட்டக்களப்பு மாவட்டத்தில் நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இங்கு வயற்செய்கையில் ஈடுபடுவோர் கமநல சேவைகள் திணைக்களத்தில் அனுமதி பெற்றே நெல் எடுத்துச் செல்ல முடியும். மேலும் தமக்குச் சொந்தமில்லாத வயல்களில் நெற்செய்கையில் ஈடுபட முடியாது. விவசாயிகள் அருகிலுள்ள இராணுவ முகாம்களில் அறிவித்துவிட்டே வயல் வேலையில் ஈடுபடலாம். மேலும் வயல்களுக்குச் செல்லும் போது அடையாள அட்டைகள் எடுத்துச் செல்லப்படவேண்டும் என்பதுடன் வயல் வேலையில் ஈடுபடுவோர் பெயர்ப் பட்டியல் அருகிலுள்ள இராணுவ முகாமில் சமர்ப்பிக்க வேண்டும் என ராணுவ அதிகாரி அறிவித்துள்ளார்.

### வீரச்சாவு

இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்தலெப்டினன்ட் திருநேசன்/சுந்தர் (கந்தையா ஜெயச்சந்திரன், இருதயபுரம், மட்டக்களப்பு) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### இருவர் காயம்

மினிபஸ் ஒன்றுடன் தட்டிவான் மோதியதால் இருவர் காயமடைந்துள்ளனர். இச் சம்பவம் சாவகச்சேரிச் சந்தைப்பகுதியில் நடைபெற்றது.

நிறுத்திவைக்கப்பட்டிருந்த மினிபஸ்ஸின் பின் பக்கமாக எதிர்பாராத விதமாக மோதியமையாலேயே இவ் விபத்து நிகழ்ந்தது. இவ்விபத்தில் வே. சுந்தரம் (வயது 67) உட்பட மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார். (86)

### குழந்தை மரணம்

நித்திரையில் இருந்த வேளை அறைக் கதவு கழன்று வீழ்ந்ததில் அதில் நசியுண்ட 11 மாத குழந்தை பரிதாபகரமாக மரணமடைந்தது.

மேற்படி சம்பவம் நேற்று அதிகாலை கைதடிப் பகுதியில் நடந்தது. கருநிஜா பாலகிருஷ்ணன் என்னும் குழந்தையே இவ்வாறு மரணமடைந்தது. (இ),(ச)

## பார்த்தால் குதிப்பீர்கள்! தவறவிட்டால் தவிப்பீர்கள்!!

### விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து தரும்



முல்லை மாவட்ட கலைஞர்களின் முத்துக்கள்

## முக்கிய அறிவித்தல்

### இறைச்சியின் - தற்காலிக விலை


யாழ். மாநகர சபையின் - நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் அனுமதிபெற்றுள்ள மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர்கள் ஒன்று சேர்ந்து, பாவனையாளர்களும் - மாட்டு கொள்முதல் வியாபாரிகளும் பாதிக்கா வண்ணம் - தற்காலிகமாக 05-02-94 சனிக்கிழமை தொடக்கம் பரவலாக மாட்டிறைச்சி 80/- ரூபாவாக விற்கப்படும் என்பதை இறைச்சி பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்

யாழ். மாநகர சபையின் திருநெல்வேலி பிரதேச சபையின் அனுமதி பெற்றுள்ள மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர்கள்.

(சி-8518)

## அஞ்சலித்தோம் மூன்றாண்டில்



### மேஜர் சலீம்

(அல்போன்ஷஸ் ஜோண் பிறின்ஸ்ரன்)


மண்ணில்: 27-01-1969 மண்ணுக்காய்: 05-02-1991

முத்தென்னும் அல்போன்ஷஸ் யோண் பிறின்ஸ்ரன்
மூன்றாண்டு கடந்தாலும் முன்னே நின்று
தித்திக்கும் தீந்தமிழ் மண்ணுக் காகத்
தீரரிரு பத்தொன் பாரோ டொன்று சேர்ந்து
கர்த்தனிரு கழலடியைச் சேர்ந்து ஈழங்
காண்பதற்குப் பேசுகின்றார்; நாமக விங்கு
நித்தமுனை நினைந்தழுது நெஞ்சம் ஊறும்
நீரதனால் கழுவியிறை வேண்டுகின்றோம்.

இல. 16 "சலீம்" வீதி, பாஷையூர் யாழ்ப்பாணம். -- குடும்ப நண்பர்கள்

(சி-8513)

## 4-ம் ஆண்டு நினைவலைகள்



## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

04-02-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 604

வடபகுதிக்கு உள்ளேவந்த வாகன இலக்கங்கள்:

26-5046, 26-4139, 26-9140, 26-2125, 26-5244
26-0525, 26-3321, 26-3146, 27-6579. 28-6748
24-9489, 24-4153, 24-4207, 24-6439, 42-9326
42-1754, 42-0704, 42-3815, 42-0728, 41-1531
43-3854.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-5556, 43-0916, 27-4628, 27-8929, 27-4920
26-507, 26-3177, 26-3410, 26-8810, 24-7087

அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்

## அமைய/ஆண், பெண் வெற்றிடங்கள்-சுத்திகரிப்புத் தொழிலாளிகள்

இவ் வைத்தியசாலையில் அமைய/ஆண், பெண் சுத்திகரிப்புத் தொழிலாளிகள் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன;

1. **தகைமைகள்:**
   குறைந்தது 8-ம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. 10-02-94-ம் திகதியன்று 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரர்கள் இவ் வைத்தியசாலையிலிருந்து 5 மைல் சுற்றாடலில் வசிப்பவராக இருந்தால் முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் எனது பணிமனையில் 10-02-94 வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பதாரர்கள் பின்பு என்னால் அறிவிக்கப்படும் திகதியில் எனது பணிமனையில் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

பணிப்பாளர்
வைத்திய கலாநிதி செல்வி என். கனகரட்டினம்.
03-02-94 (கி-8512)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது



முத்துக்கள் இரண்டு

## பாயும்புலி பண்டாரவன்னியன்

(வரலாற்று நாடகம்)

## ஆக்கிரமிப்பாளரின் அவலம்

(இசை நாடகம்)

இடம்: யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலைஅரங்கு
காலம்: 05-02-94 சனி பி.ப. 4.00 மணி
அன்பளிப்பு: *1000/- 500/- 15/- 10/-*

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும்

*விளம்பர அன்பளிப்பு:*


அருச்சுனா
சகலவிதமான பிறேமிங்
செய்வதற்கு யாழ்நகரில்
சிறந்த ஸ்தாபனம்
சுவாமிப் படங்கள் பிறேம் போட்டும்,
போடாமலும்
ஃ ஷோக்கேஸ், கண்ணாடிபூட்டு, பிணைச்சல்..
மற்றும்
ஃ மவுண்ட் வகைகள் விற்பனைக்கு உண்டு.

**அருச்சுனா**
அருச்சுனா வீதி, (ஸ்ரான்லிவீதி)
யாழ்ப்பாணம்.

**உதயம் நிழற்படக் கலையகம்**
(ஸ்ருடியோ)
உங்கள் அவசரத் தேவைக்கு
கறுப்பு வெள்ளைப் படங்கள்
உடனுக்குடன் எடுத்துக் கொடுக்கப்படும்.
ஃ திருமணமா ஃ பிறந்தநாளா
ஃ பூப்புனித நீராட்டு விழாவா
அனைத்து வைபவங்களிற்கும்
வர்ணப் படப்பிடிப்பிற்கு நாடுங்கள்

**உதயம்**
நிழற்படக் கலையகம்
(ஸ்ருடியோ)
அருச்சுனா வீதி, (ஸ்ரான்லிவீதி)
யாழ்ப்பாணம். (7421)

## 4-ம் ஆண்டு நினைவலைகள்



மழலையாய்:
12-07-1970

மாவீரனாய்;
21-01-1990

**வீரவேங்கை அன்பழகன்**
(முருகேசு ரவீந்திரன்)
திதி: *05.02.1994*

"இலட்சிய வீரர்கள் இறப்பதுமில்லை
விடுதலைப் புலிகள் வீழ்வதுமில்லை"

இன்று இவரது நினைவாக எமதில்லத்தில் நடைபெறவுள்ள மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தவமகால், - குடும்பத்தினர்;
தம்பகாமம்,
பளை. (7365)

## மரண அறிவித்தல்

## இராமச்சந்திரஐயர் இராசலட்சுமிஅம்மா

(சின்னக்குரு அம்மா)

இராமச்சந்திரஐயர் இராசலட்சுமி அம்மா காலமாகிவிட்டார்; அன்னாரின் ஈமக்கிரியைகள் 4. 2. 94 வெள்ளிக்கிழமை சாரதா பீடத்தில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை வடக்கு தகவல்:
சாரதா பீடம். இ. கெங்காதரக் குருக்கள்
(7416) (மகன்)